**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 14.11.2025

அசல் வழக்கு எண். 12/2020

வா.சா. 1. – கோபால், த/பெ. குமார்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

ஒன்று முதல் நான்கு வரையிலான பிரதிவாதிகள் உங்களிடம் பிரச்சனை செய்ததை பொதுமக்கள் நிறைய பேர் பார்த்தார்கள் என்று சொல்லி உள்ளீர்கள் அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் தகப்பனார் குமார் என்பவர் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் ஐந்து பேர் ஆவார்கள். குமார் உடன்பிறந்தவர்கள் முறையே பெரியப்பா துரைசாமி, சித்தப்பா விஜயன், சித்தப்பா முனியன், சித்தப்பா ஆறுமுகம், அத்தை கற்பகம் ஆகியோர் ஆவார்கள். உங்கள் சித்தப்பா விஜயன் மாட்டு வண்டி ஓட்டுவாரா என்றால் ஓட்ட மாட்டார். உங்கள் சித்தப்பா ஆறுமுகம் மாட்டு வண்டி ஓட்டுவாரா என்றால் மாட்டு வண்டி ஓட்டுவார். சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக அரசாங்கத்திற்கு புறம்பாக மணல் எடுத்ததாக ஆறுமுகம் மீது வழக்கு உள்ளது என்றால் சரிதான். ஆகவே அவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார்கள் என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் உள்ளாட்சித் தேர்தலில் வார்டு மெம்பருக்காக தேர்தலில் போட்டியிட்டார் என்றால் சரிதான். அந்த தேர்தலில் குமார் என்பவருக்கும் முதல் பிரதிவாதி அசோக் என்பவருக்கும் தேர்தல் தகராறு ஏற்பட்டு மனக்கசப்பு இருந்து வருகிறது என்றால் சரிதான். ஒன்று முதல் ஐந்து வரையிலான பிரதிவாதிகள் ஏற்பட்ட மனக்கசப்பிற்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்று கோரியிருப்பது

**ஏற்புடையது அல்ல என்றால் சரி இல்லை. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram